**OS No.118/2018**
DW 1 – நல்லதம்பி

நாள் 25.02.2026

**இடைநிலை மனு எண்கள் 13 /2026, 14/2026 மற்றும் 15/2026 அனுமதிக்கப்பட்டு பி.வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**பி.வா.சா.ஆ 12** ஆவணத்தின் தீர்ப்பு நகலை சமூகம் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள **பி.வா.சா.ஆ 15** ஆவணத்தில் நான் வாதியோ, பிரதிவாதியோ கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 15 ஆவணத்தில் கண்ட வாதி தான் தாவா வழக்கின் வாதி ஆவார்.

பி.வா.சா.ஆ 15 ஆவணத்தில் ராஜேஷ், வெங்கடாச்சலம் ஆகியோர்கள் பிரதிவாதிகள் ஆவார்கள். பி.வா.சா.ஆ 15 தீர்ப்புரை ஆவணத்தின் தீர்ப்பாணை நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ 15 ஆவண வழக்கில் வழக்கிடை சொத்துக்கள் எது என்பது எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ 15 ஆவண வழக்கில் கண்ட வழக்கிடை சொத்துக்கள் யார் யாருக்கு கிரையம் கொடுத்தது என்ற விபரம் எனக்குத் தெரியாது.

பி.வா.சா.ஆ 15 ஆவண வழக்கில் கண்ட சொத்துக்களுக்கும் தாவா சொத்துக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பி.வா.சா.ஆ 15 ஆவண வழக்கில் எனக்கு எந்த சங்கதிகளும் நேரடியாகத் தெரியாது. பி.வா.சா.ஆ 15 ஆவண வழக்கில் கண்ட சொத்துக்கள் பற்றியும் எனக்குத் தெரியாது.

பி.வா.சா.ஆ 12 பிராது வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புரை நகலை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். அந்த வழக்கில் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நகலை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்தால் தான் அந்த வழக்கின் தீர்ப்பு, ஆவணங்கள் மற்றும் யார் யார் வாய்மொழி சாட்சியம் அளித்தார்கள் என்ற விபரங்கள் தெரியவரும் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ 16 ஆவணத்தில் பொன்னையா வெள்ளைச்சாமி இருவரும் சேர்ந்து லெட்சுமி அம்மாள் என்பவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு என்பது உண்மையான, சரியான லெட்சுமிஅம்மாளுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு அல்ல என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ 17 பதில் அறிவிப்பு என்பது உண்மையான, சரியான லெட்சுமிஅம்மாள் அனுப்பயி பதில் அறிவிப்பு அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கண்டுள்ள லெட்சுமிஅம்மாள் என்பவருக்கும் வழக்கின் வாதி சிவராமஅய்யர் மனைவி லெட்சுமிஅம்மாள் என்ற உண்மையான, சரியான நபருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

பி.வா.சா.ஆ 15 ஆவண வழக்கில் கண்ட சொத்துக்களான சர்வே எண் 133/34 சொத்துக்களை இந்த வாதி இடைநாயக்கர் கிராமத்தை சேர்ந்த வீரையா மகன் சங்கர் என்பவருக்கு கடந்த 2023 ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றும், அதே போல் அந்த வழக்கில் கண்ட சர்வே எண் 133/11 பெரியப்பன் மகன் மாரியப்பன் வாதியிடம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ 4 ஆவண தீர்ப்பு நகல் என்பது வாதிகளாக பொன்னையா வகையறாவும் பிரதிவாதிகளாக லெட்சுமிஅம்மாள் வகையறாவும் நடத்திய வழக்காகும். மேற்படி வழக்கில் 4 ம் வாதி வெள்ளைசாமி என்றால் சரிதான். அந்த வெள்ளைச்சாமி எனது தகப்பனார் என்று சொன்னால் சரியல்ல. அது வேறு வெள்ளைச்சாமி ஆவார்.

மேற்படி அசல் வழக்கு எண் 138/1996 என்பது வாதிகளுக்கு எதிராக தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி

வழக்கில் 3 ம் பிரதிவாதி திருமேனி என்பவர் ஆவார். அந்த வழக்கில் கண்ட 2 வது இலக்க சொத்தான புல எண் 114 யும், 3 வது இலக்கமான புல எண் 116 யும், 01.09.1994 ம் தேதியில் அந்த வழக்கில் கண்ட 3 ம் பிரதிவாதியான திருமேனி என்பவர் கிரையம் வாங்கிதால் தான் மேற்படி வழக்கில் திருமேனி 3 ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

அசல் வழக்கு எண் 138/1996 வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை என்றால் சரிதான். வாய்மொழி சாட்சியம் என்பது 1 ம் பிரதிவாதியான லெட்சுமிஅம்மாளோ, 2, 3 பிரதிவாதிகளான சேகர், திருமேனி ஆகியோர்களோ நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகி வாய்மொழி சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

அந்த வழக்கில் கண்ட 3 ம் பிரதிவாதி எனக்கு வேண்டியவர் ஆவார். உறவினர் அல்ல, எங்கள் கிராமத்தை சேர்ந்தவர். 01.09.1994 ம் தேதியில் அசல் வழக்கு எண் 138/1996 வழக்கின் 1 ம் பிரதிவாதியான லெட்சுமிஅம்மாள் என்பவரிடம் இருந்து திருமேனி கிரயம் வாங்கிய புல எண்கள் 114 மற்றும் 116 ஆகிய சொத்துக்களை பின்னீடு மேற்படி திருமேனி சுசீலா வகையறாவிற்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

அந்த கிரையம் கொடுத்தது தொடர்பாக சமூகம் நீதிமன்றத்தில் தாவா வழக்கின் வாதிக்கும் சுசீலாவிற்கும் அசல் வழக்கு எண் 38/2020 என்ற வழக்கு நடைபெற்று வரும் விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

பி.வா.சா.ஆ 4 தீர்ப்புரையில் கண்ட வழக்கில் மொத்தம் உள்ள 3 இலக்க சொத்துக்களில் புல எண் 114, 116 ஆகியவைகளை 3 ம் பிரதிவாதி கிரையம் வாங்கியது போக மீதம் உள்ள புல எண் 99/1 என்ற சொத்து உள்ளது என்றால் சரிதான்.

அந்த புல எண் 99/1 ஐ தாவா வழக்கின் வாதி 2022 ல் வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 4 ல் கண்ட லெட்சுமிஅம்மாளுக்கும் சிவராமன் ( எ ) பிச்சுஅய்யர் மனைவி லெட்சுமிஅம்மாளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

01.09.1994 ம் தேதி திருமேனி கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தைப் பார்த்தால் எந்த லெட்சுமிஅம்மாள் உண்மையான லெட்சுமிஅம்மாள் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**-Sd-**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**-Sd-**

**District Munsif,**
**Manamadurai.**